| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>பொன்னம்மாள் | அ.வ.எண். 198/2021 | 08.01.2025 |

குறுக்கு விசாரணை

1) எனது தகப்பனார் பெயர் பெரியசாமி மற்றும் எனது தாயார் பெயர் கருப்பாயி என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனாருக்கு ரெத்தினம், ராமர், கோவிந்தம்மாள், சின்னம்மாள், பொன்னம்மாள் ஆகிய நாங்கள் வாரிசுகள் என்றால் சரிதான். என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க 5ம் பிரதிவாதி ராமர் என்னிடம் கேட்டாரா என்றால் கேட்டார். மேற்படி ராமரின் மகனான 1ம் வாதி அவர்கள் சொல்வது போல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எனது அண்ணன் ரெத்தினம் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எனக்கு திருமணத்தின் போது எத்தனை சவரன்நகை போட்டார் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி ரெத்தினத்திற்கும், ராமருக்கும் பாகம் பிரிந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ரெத்தினத்திற்கும், ராமருக்கும் பாகம் பிரிந்த சொத்துக்களில் ராமர் சில சொத்துக்களை விற்பனை செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) நான், சின்னம்மாள், கோவிந்தம்மாள் ஆகிய 3 பேரும் எனது தகப்பனார் சொத்துக்களை பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டோமா என்றால் இல்லை. தற்போது வரை ராமரும், சந்திரசேகரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் தாவா கிராமத்திற்கு வந்தால் ஒரே வீட்டில் தான் இருப்பார்கள், சந்திரசேகர் வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்டார். ராமரும், ரெத்தினமும் தங்களுக்கு பாகமாக பிரிந்த

சொத்துக்களை அவர்அவர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், பயிர் செய்து வருகிறார்கள். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாளதுதேதி வரை எனது தகப்பனார் சொத்துக்களில் பாகம் கேட்டு எனது இறந்துபோன அண்ணனான ரெத்தினம் என்பவரிடமோ அவரது வாரிசுகளிடமோ அல்லது ராமரிடமோ கேட்டேனா என்றால் இல்லை, எனக்கு சொத்தே வேண்டாம். மேற்படி சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனார் பெரியசாமியின் சொத்துக்கள் என்றால் சரிதான், அவர் சம்பாதித்த சொத்துக்கள் ஆகும். கோவிந்தம்மாளும், சின்னம்மாளும் சொத்துக்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்களா என்றால் சொல்லிவிட்டார்கள்.